தொகுதி - XVI மாசி- 2016 இதழ் - 1

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

# CINTANAI

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI  is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.



| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Prof. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S. Arulanantham<br>Mrs. S. Prabaharan |



| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| Price per copy | 500/-SLR |
| **Published by** | The  Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |

# மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு

சிதம்பரநாதன் உதயகுமார் ; யேசுகுமார் கலைப்பிரியா

**ஆய்வுச் சுருக்கம்**

மட்டக்களப்பு மாவட்டமானது 14 பிரதேச செயலக பிரிவுகளையும் 345 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மொத்த மீனவ சனத்தொகை 25726 ஆகும். இங்கு மொத்தமாக 20,726 மீனவ குடும்பங்கள் காணப்படுகின்றனர் (District Fishrs office - Batticalao 2014.). இவ்வாய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளினூடாகப் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் முறையினைக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகள் தொகுத்தறி முறையினைப் பிரதானமாகவும் உய்த்தறி முறையினைத் துணையாகவும் கொண்டு பெறப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விவசாயத்திற்கு அடுத்த படியாக மீன்பிடித்துறையினையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இம்மீன்பிடித் துறையானது இப்பிரதேச மக்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றுகின்றது. அந்த வகையில் இம் மீனவர்களின் மீன்பிடி உற்பத்தியானது இம்மாவட்ட மக்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றுகின்றது. ஆனாலும் பெரும்பாலான மீனவர்கள் சந்தைப்படுத் தலில் ஏற்படுகின்ற பிரச்சினை காரணமாக பாரிய இழப்புகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வின் பிரதான நோக்கமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற மீன்பிடி உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிவதாகும்.

**திறவுச் சொற்கள் :** சந்தைப்படுத்தல், விலைப்போட்டி, நிரம்பல், கேள்வி, வறுமை

## 1.0 அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டமானது 14 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. மேலும் இம்மாவட்டமானது 346 கிராம சேவக பிரிவுகளையும் 876 கிராமங் களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

இப்பகுதி மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடிக்கைத்தொழிலையே மேற்கொள்கின்றனர். இம் மாவட்ட மீன வர்கள் முறைப்படியாக மீனை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் அதிகமான பிரச்சினை களை எதிர்நோக்குகின்றனர். இதனால் இம் மீனவர்கள் குறைந்த வருமானத்தையே பெற்றுக் கொள்கின்றனர். ஆகவே இதனை ஒரு ஆய்வாக மேற்கொண்டு இதற்கான காரணத்தை வெளிக்கொண்டு வரும் அவசியத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் மூலம் பெறப்படும் தகவல்களானவை இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்லப்படுவதன் மூலம் அவர்களின் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு வாய்ப்புண்டு.

## 2.0 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுப் பிரதேசத்தில் காலம் காலமாக நிலவி வரும் கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடி சமூகத்தின்வாழ்வாதார பிரச்சினைகள் மீன்பிடி அளவு மட்டத்துடனும் அவற்றின் சந்தைப்படுத்தலிலும் தங்கி இருப்பதனால்

அவற்றோடுள்ள பிரச்சினைகளை எவ்வாறு இனம் காண்பது என்பதும் அவற்றுக்கான தீர்வுகளை வழிமொழிவதுமே முக்கிய ஆய்வுப் பிரச்சினையாக அமைகின்றது. இம் மாவட்ட மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்கள் மீன் உற்பத்திக்கான சந்தைப்படுத்தலில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் தொடர்ந்தும் இம் மீனவர்கள் குறைந்தளவு வருமானத்தையே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படுகின்றது. இவ்வாறு குறைந்த வருமானத்தை ஏற்படுத்தும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**2.1 ஆய்வின் நோக்கம்**

பின்வரும் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

1. மீன்பிடி உற்பத்தியின் தற்போதைய சந்தைப்படுத்தல் நிலைமை பற்றி அறிதல்.
2. சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் எவ்வாறு குறைந்த வருமானத்திற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை அறிதல்.
3. இம் மீன்பிடி உற்பத்தியின் சந்தைப் படுத்தலின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

பிருந்தா, பமிலா, டியுரா(2004) ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இலங்கை வடமாகாணத்தின் கடல் வலயப் பின்னணியானது பௌதிக, சமூகப் பொருளாதார அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் பொருளாதார நடவடிக்கையில் மீன்பிடிக் கைத்தொழில் ஆற்றி வரும் பங்களிப்பு அதன் வளர்ச்சிப் போக்கும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் பதனிடலும் போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவர்களது ஆய்வின் சிபாரிசு முன்மொழிவாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளின் விரிவாக்கம் மேலும் மூலதனவாக்கம் பற்றிய கரிசனை ஆகியன முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐயுப். எஸ் (2005) அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அம்பாறை மாவட்ட மீன்பிடிக் கைத்தொழிலின் போக்கு மீன்பிடி முறைகள் மீனவ சமூக அமைப்பு போன்ற அம்சங்கள் குறித்து நோக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் மீனவ சமூகத்தின் வறுமை பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுரண்டல் மற்றும் தங்கியிருப்பின் நியமங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Alan Post (2010) அவர்களின் ஆய்வில் மீன்பிடிக்கைத்தொழிலின் பிரச்சினைகளும் அதற்கான நிறுவன ஏற்பாடுகளும் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும் வர்த்தக ரீதியாக மீன்பிடிக் கைத்தொழிலை மேற்கொள்வதில் காணப்படக்கூடிய தடைகளாக மீன் வளங்களை விஞ்ஞான முறையில் இனங்காண்பது, நிலையான மீன் நிரம்பலை நிச்சயிப்பது, நஸ்ட ஈட்டு முறைகள், மீன் உற்பத்தி, கட்டுப்பாடற்ற மீன்பிடி முறைமைகள் ஆகியன குறித்துக் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுச் சிபாரிசுகளாக தனியார் துறையூடாகச் சந்தைப்படுத்துதல், வசதிகளை விருத்தி செய்தல், மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், மீன் வளங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை மற்றும் கொள்கைகளை ஏற்படுத்துதல் என்பன முன்வைக்கப் பட்டுள்ளன.

**3.0 ஆய்வு முறைமை**

ஆய்வின் நம்பகத்தன்மையானது அவ்வாய்விற்கெனத் திரட்டப்படும் தகவல்களிலேயே தங்கியுள்ளது. இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் தர தரவு மூலங்கள் பயன்படுத்தப்படுகிறது. முதலாந்தர தரவு சேகரிப்பின்போது வினாக்கொத்துக்கள்

பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக்கெனத் தரவுகள் மீன்பிடி உற்பத்தியாளர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலமும் நேர் காணல் மூலமும் திரட்டப்பட்டது.

இரண்டாம் தரவு சேகரிப்பின்போது மாவட்ட மீன்பிடி அலுவலக (மட்டக்களப்பு) அறிக்கை, மத்திய வங்கி ஆண்டறிக்கை, இணையத்தளங்கள் என்பன பயன்படுத் தப்பட்டுள்ளன.

### 3.1 மாதிரி எடுப்பும் மாதிரி அளவும்

ஆய்வின் சனத்தொகையினைப் பிரதிபலிப்பதாக மாதிரி எடுப்பானது அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக 150 மீன்பிடி உற்பத்தியாளர்கள் மாதிரியாகக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாய்வுப் பகுதியில் 25726 மீனவர்கள் மீன்பிடி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் விகிதாசார அடிப்படையில் அதாவது தெரிவு செய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள மொத்த மீனவர்களின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு விகிதாசாரத்தின் அடிப்படையில் 150 மீனவர்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டன.

### 3.2 மாதிரிப் பரம்பல்

தெரிவு செய்யப்பட்ட மாதிரியானது விகிதா சார அடிப்படையில் 150 மாதிரி மீனவர்களும் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தகவல் சேகரிக்கப்பட்டது. அம் மாதிரி பரம்பல் பின்வருமாறு அமையும்.

**அட்டவணை 5.**
**ஆள் எண்ணிக்கையடிப்படையில் மீன்பிடித் தொழில்கள்**

| இல | பிரதேச செயலக பிரிவு | மொத்த மீன்பிடி உற்பத்தி யாளர்கள் | மாதிரி எடுப்பு | சத வீதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | வாகரை வடக்கு, மத்தி, தெற்கு | 146 | 09 | 06 |
| 2. | வாழைச்சேனை மேற்கு, மத்தி, கிழக்கு, தெற்கு | 1142 | 72 | 48 |
| 3. | செங்கலடி | 629 | 35 | 23 |
| 4. | மண்முனை வடக்கு I, வடக்கு II | 146 | 09 | 06 |
| 5. | மண்முனைப் பற்று வடக்கு I, வடக்கு II | 402 | 25 | 17 |
| மொத்தம் | | 2365 | 150 | 100 |

(மூலம்: மீன்பிடித் திணைக்களக் கையேடு -மட்டக்களப்பு, புள்ளிவிபர ஏடு (2014), மட்டக்களப்பு கச்சேரி)

### 3.3 தரவு முன்வைப்பும் பகுப்பாய்வும்

சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து ஆய்வுப் பிரச்சினைக்கு அவசியமான தகவல்கள் அதாவது இடையம், இடை மற்றும் விலகல் போன்ற பெறுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நவீனத்துவமான Microsoft Excel மற்றும் Statistical Package for Social Science (SPSS) 11.0 எனும் வடிவமும் பயன்படுத்தப்பட்டது. மேற்படி முறைகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்படும் முடிவுகளானது அட்டவணை (Tables), வரைபுகள் (Charts), புள்ளிவிபரங்கள் (Statistics) போன்ற பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.4 தரவு மதிப்பீடு

வினாக்கொத்தில் கேட்கப்பட்ட வினாக் களானவை ஐந்து அளவுத்திட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்தது. அவையாவன;

**அளவுத்திட்டம் (Scale)**
**அளவீடு**

1. உறுதியாக உடன்படவில்லை (1)
2. உடன்படவில்லை (2)
3. உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை (3)
4. உடன்படுகிறேன் (4)
5. உறுதியாக உடன்படுகிறேன் (5)

தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வரும் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 5.2

| வீச்சு | தீர்மானம் |
|---|---|
| $1 \leq D_1 < 2.5$ | ஏற்றுக்கொள்ளப்படவில்லை |
| $2.5 \leq D_1 < 3.5$ | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| $3.5 \leq D_1 = 5$ | உறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 4.0 ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### 4.1 பொருள்மீதான விலைத் தளம்பல்:

விலைத்தளம்பல்கள் மீன்பிடி உற்பத்திகளின் சந்தைப்படுத்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என வினவப்பட்டபோது 62 வீதமானவர்கள் உடன்படுவதாகவும், 32 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை எனவும் தெரிவித்தனர். இதன் இடை 3.78 ஆகவும் காணப்படுகிறது. அனேகமானவர்களின் கருத்தின்படி அடிக்கடி ஏற்படும் விலைத்தளம்பல் சந்தைப்படுத்தலில் பாரிய பிரச்சினையாக இருக்கிறதென்று கூறுகின்றனர்.

அனேகமானவர்களின் கருத்தின்படி அடிக்கடி ஏற்படும் விலைத்தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதில் அரசினுடைய பங்களிப்புக் குறைவாகக் காணப்படுவது சந்தைப்படுத்தலில் பிரச்சினையை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர். இத்தகைய குறைந்த மட்டப் பங்களிப்பிற்கு இடை 3.96 ஆகவும் காணப்பட்டது.

விலைத்தளம்பலில் குறைந்த மட்ட தகவற் கிடைப்பனவு கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என நீர் கருதுகிறீரா என்பதற்கு 18 வீதமானவர்கள் உடன்படவில்லை. 58 வீதமானவர்கள் தாம் உடன்படுவதாகத் தெரிவித்த அதேவேளை இதன் இடை 3.35 ஆகவும் காணப்பட்டது.

### 4.2 இடைத்தரகர்

இடைத்தரகர் ஆதிக்கம் உமது பிரதேசத்தில் கணிசமாகக் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. அத்துடன் 55 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். இடைத்தரகர் ஆதிக்கம் தொடர்பான கூற்றுக்கு இடை 3.61 ஆகவும் காணப்பட்டது. இதிலிருந்து இடைத்தரகர்களின் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுவதால் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினையை மீன்பிடி உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குவதாகக் கருதுகின்றனர்.

இடைத்தரகர்கள் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் மீன் உற்பத்திகளின் விலைகளில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 21 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. 54 வீதமானவர்கள் உடன்பட்டார்கள். இடைத்தரகர் விலையின் மீது கொண்டுள்ள ஆதிக்கம் தொடர்பான கருத்திற்கு இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

### 4.3 வெளியூர் மீன்களின் சந்தைப் போட்டி

குறித்த இம் மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீன்களின் விற்பனைக்குப் போட்டியாக வெளி

மாவட்டங்களிலிருந்து வருகின்ற மீன்வகைகள் உமது பிரதேசத்திற்கு எடுத்து வரப்படுகின்றது என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் இக்கூற்றுடன் உடன்படவில்லை. 65 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். எனவே வெளி இடங்களில் இருந்து வருகின்ற மீன்களின் தொகை காணப்படுகின்றது. இதற்கு இடை 3.54 ஆகவும் காணப்பட்டது. இம் மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்களின் மூலமாக விலைமட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது எனக் கூறப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 66 வீதமானவர்கள் உடன்பட்டனர். விலைமட்ட வீழ்ச்சிக்கான இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

இம் மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்பிடி உற்பத்திகளின் மூலமாக உள்ளூரிலேயே போட்டி அதிகரித்துள்ளது எனும் கூற்றுக்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. மற்றும் 51 வீதமானவர்கள் இக்கருத்திற்கு உடன்படுவதாகத் தெரிவித்தனர். உள்ளூர் போட்டித்தாக்கத்திற்கான இடை 3.49 ஆகவும் காணப்பட்டது.

**4.4 சந்தைத் தகவல் கிடைப்பனவு:**

போதுமான சந்தைத்தகவல்கள் கிடைக்கப் பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 69 வீதமானவர்கள் உடன்படுவதாகவும், இதன் இடை 3.46 ஆகவும் காணப்பட்டது. அரசினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்பு குறைந்த மட்டத்திலுள்ளதற்கு 69 வீதமானவர்கள் உறுதியாக உடன்படுவதாகத் தெரிவித்தனர்.

குறைந்த மட்டத் தகவற் கிடைப்பனவு காரணமாக உமது இடைத்தரகர் ஆதிக்கம் உமது பிரதேசத்தில் கணிசமாகக் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. அத்துடன் 55 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். இடைத்தரகர் ஆதிக்கம் தொடர்பான கூற்றுக்கு இடை 3.61 ஆகவும் காணப்பட்டது. இதிலிருந்து இடைத் தரகர்களின் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுவதால் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினையை மீனவர்கள் எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

இடைத்தரகர்கள் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் மீன்களின் விலைகளில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 21 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. 54 வீதமானவர்கள் உடன்பட்டார்கள். இடைத்தரகர் விலையின் மீது கொண்டுள்ள ஆதிக்கம் தொடர்பான கருத்திற்கு இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

**4.5 வெளியூர் பொருட்களின் போட்டி:**

குறித்த இவ் ஆய்வுப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் அதே வகையான பொருட்கள் வெளியூர்களிலிருந்து உமது பிரதேசத்திற்கு எடுத்து வரப்படுகின்றது என நீர் கருதுகின்றீரா எனக் கேட்கப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் இக்கூற்றுடன் உடன்படவில்லை. 65 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். வெளியூர் மீன்பிடி பொருட் கிடைப்பனவிற்கு இடை 3.54 ஆகவும் காணப்பட்டது.

இம்மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன் உற்பத்திகளின் மூலமாக விலைமட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது எனக் கூறப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 66 வீதமானவர்கள் உடன்பட்டனர். விலை மட்ட வீழ்ச்சிக்கான இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

இம்மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன் உற்பத்திகளின் மூலமாக உள்ளூரிலேயே போட்டி அதிகரித்துள்ளது எனும் கூற்றுக்கு

20 வீதமானவர்கள் உடன்படவில்லை. மற்றும் 51 வீதமானவர்கள் இக்கருத்திற்கு உடன்படுவதாகத் தெரிவித்தனர். உள்ளூர் போட்டித்தாக்கத்திற்கான இடை 3.49 ஆகவும் காணப்பட்டது.

**4.6 பொருளின் தன்மை:**

54 வீதமான உற்பத்தியாளர்கள் தம்முடைய பொருட்கள் நியம தரம் மற்றும் நியம அளவுகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவி த்தனர். இதன் இடை 3.76 ஆகவும் காணப்பட்டது. 56 வீதமான மீன்பிடி உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன்களில் காணப்படுகின்ற தர வேறுபாடுகள் காரணமாக விற்பனை வீழ்ச்சியடைகின்றது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.84 ஆகவும் காணப்பட்டது. 58 வீதமான மீன் உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன் உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரி வித்தனர். இதன் இடை 3.83 ஆகவும் காணப் பட்டது.

**4.7 போக்குவரத்து வசதிகள்:**

54 வீதமான உற்பத்தியாளர்கள் போக்குவரத்து செலவுகளானது தமது உற்பத்திகளின் மீதான விற்பனை வருமானத்தையும் இலாபத்தினையும் வீழ்ச்சியடையச் செய்கின்றது என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். 69 வீதமான மீன்பிடி உற்பத்தியாளர்கள் தம்முடைய பொருட்களுக்கான போக்குவரத்தில் பாதுகாப்பு குறைவாகவும் சிக்கலானதாகவும் மீன்உற்பத்திகளினை கொண்டுசெல்ல உகந்ததாக போக்குவரத்து வசதி காணப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தனர். 72 வீதமான மீனவ உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு அவசியமான போக்குவரத்து வசதிகள் காணப்படவில்லை. என்னும் கருத்தை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.83 ஆகவும் காணப்பட்டது.

| வீச்சு | தீர்மானம் | மீடிறன் | வீதம் (%) |
|---|---|---|---|
| $1 \leq D_1 < 2.5$ | ஏற்றுக்கொள் எப்படவில்லை | 43 | 29 |
| $2.5 \leq D_1 < 3.5$ | ஏற்றுக்கொள் எப்பட்டது | 31 | 21 |
| $3.5 \leq D_1 \leq 5$ | உறுதியாக ஏற்றுக்கொள் எப்பட்டது | 76 | 51 |
| மொத்தம் | | 150 | 100 |

**அட்டவணை 6.2 ஆய்வின் தரவுகளின் முழுமொத்த முடிவு**

**5.0 முடிவுரை**

**பொருள் விலை தளம்பல்:**

மீன் சந்தைப்படுத்தலின் போது விலைத் தளம்பலின் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அதாவது வாகரைக் கிராமத்தை எடுத்துக்கொண்டால் இங்கு மீனின் விலைத்தளம்பலுக்கு காரணம் இடைத்தரகர்கள் நியமிக்கின்ற விலைவாசியே ஆகும். உத்தரவாத விலையின்மையால் விலைத்தளம்பல் காரணமாக குறைவான விலைக்குக்கூட சந்தைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றமையானது இப்பிரதேச மீனவர்களை நட்டமடையச் செய்கின்றது. தமது பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமை மீனவர்களை மனமுடையச் செய்வதால் அவர்களால் கூடியளவு மீன் உற்பத்திகளை மேற்கொண்டு சந்தையைக் கைப்பற்ற முடியாதுள்ளது.

**5.1 இடைத்தரகர்கள்:**

சந்தைப்படுத்தலில் இடைத்தரகர்களின் ஆதிக்கம் தவிர்க்கமுடியாததாகவுள்ளது. பேரம்பேசி விற்கும் ஆற்றல் குறைவின் காரணமாக இடைத்தரகர்கள் கேட்கும் விலைக்கே ஓரளவு நெருங்கி வந்து மீனைக்

கொடுக்கின்றனர். சந்தையில் மீன்களின் விலை எவ்வளவாகக் காணப்படுகின்றது என்று அறிந்து அதற்கேற்ப மீனை வழங்கலாம் என மீனவர்கள் சிந்திப்பதில்லை. இதனால் அவர்கள் அடையும் இலாபத்தைவிடக் கூடுதலாகவே மீன்பிடிக்கான உற்பத்திச் செலவு அமைவதைக் காணலாம். இவ்வாறான பிரச்சினைகள் எழக் காரணம் அவர்களது சந்தைப்படுத்தல் பற்றிய அறிவின்மையே ஆகும்.

**5.2 வெளியூர் மீன்களின் சந்தைப்போட்டி:**

விலைத்தளம்பல் ஏற்படுவதற்கு வெளியூரிலிருந்து வருகின்ற மீன்களின் வருகையானது பிரதான காரணமாக உள்ளது. வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்கள் ஆய்வுப்பகுதிகளின் சந்தைகளுக்கு வருவதனால் உள்ளூர் மீன்பிடியின் கேள்வியில் சடுதியாக வீழ்ச்சி ஏற்பட்டுவருகின்றது என்றே நாம் கூறவேண்டும். குறிப்பாக திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை போன்ற பகுதிகளில் இருந்து வரும் மீன்வகைகள் ஆய்வுப்பிரதேச சந்தைக்குள் ஊடுருவதனால் உள்ளூர் மீன்பிடியின் விலையில் தளம்பல் ஏற்படுவதை உணரலாம்.

**7.2 போதிய ஆலோசனைகள் இல்லாமை:**

இங்கு உள்ள மீன்பிடியாளர்கள் தமக்கு சந்தை நிலைமை தொடர்பாகவோ, சந்தை விலைகள் தொடர்பாகவோ, இடைத் தரகர் தொடர்பாகவோ அத்துடன் வாடிக்கையாளர் தொடர்பாகவோ தகவல் எதுவும் கிடைப்பதில்லை. Fisheries offfice காணப்படுகின்ற போதிலும் அதன் ஆலோசனைச் சேவைகளானது மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது என்பது முடிவுகளிலிருந்து தெளிவாகின்றது.

**5.3 மீன்களின் தன்மை:**

இப்பகுதி மீனவர்களின் மீன்கள் நியம தரம் மற்றும் அளவுகளைக் கொண்டுள்ளது. இப்பொருட்களுக்கான சந்தையில் வெவ்வேறு இடங்களில் இருந்து வரும் மீன்கள் இப்பிரதேச மீன்களைக் காட்டிலும் தரம் வேறுபட்டு காணப்படுகிறது. எனவே போட்டிப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இப்பகுதி மீன்களின் தரம் வேறுபட்டு இருப்பதால் விற்பனை வீழ்ச்சி ஏற்படுகின்றது.

**5.4 போக்குவரத்து வசதிகள்:**

மக்களின் தினசரிப் போக்குவரத்திற்கு பெரிதும் உதவி வரும் போக்குவரத்து சேவைகள் பிராந்திய போக்குவரத்து பஸ் சேவையும் தனியார் சேவையுமாகும். போக்குவரத்து சேவைகள் சீரானதா இல்லாததால் மீன்பிடியாளர்களின் மீன்களை சந்தைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் நட்டமடைகின்றனர். பஸ் சேவையில் பொதுமக்களுடனேயே மீன்களையும் ஏற்றிச் செல்லவேண்டியுள்ளமையினால் மீன்கள் மிதிபட்டு நசிந்து போகின்றன. இவ்வாறு நசிபடும் மீன்களை குறைந்த விலைக்கே விற்கவேண்டிய நிலை காணப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. கதிரேசன் ரு ராதா, அங்காடியியல் (2004). பிரசன்னா பப்ளிகேசன் பொன்னையா தெரு திருவல்லிக்கேணி, சென்னை 600005. பக்கம் (A1 - A.M.12)
2. க. ரகுராகவன் இரா பத்பத்ரஞ்சன், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (1998). கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு. பக்கம் (1- 119)
3. யெகத் பண்டாரநாயக, சந்தைப்படுத்தல் (2002). தேசிய கல்வி நிறுவகம். இலங்கை.
4. பிலிப் கொட்லர், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (2001) (10 ஆவது பதிப்பு) இந்தியா பிரிண்டிஸ் கேள் பிறைவற் லிமிட்டட்
5. லெஸ்லி றோயர் (1999), சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், பியர்ஸ்சன் எடுகேஷன். இந்தியா.
6. புள்ளிவிபரக்கையேடு 2000 - 2014, கச்சேரி. மட்டக்களப்பு
7. மத்திய வங்கி ஆண்டறிக்கை (2005 - 2013)
8. மீன்பிடி திணைக்களம். Fisheries office Report - 2014 அறிக்கை
9. சாரதா மனோகரன் (2010) உலகின் மீன்வளம் இன்னும் 40 வருடங்கள் தானா? தினகரன் 9 2010
10. ஐயூப். எஸ் (2005), "obstacles to Overcome Poverty among fishing Society", சமூக விஞ்ஞானங்கள் துறை, ஒலுவில் - இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.